## 21. பூரணம் விழைந்திரங்கல்.

*கலிநிலைத்துறை.*

*பண் - இந்தளம்.*

**பொ**ன்கொண் மாமயி லூருயர் புண்ணிய மூர்த்தீ
உன்கண் ணீரமின் றிங்கிவ னுய்வது முண்டோ
புன்கண் மாய்த்தருள் புரிகிலை யேலுனை நம்பும்
என்கண் ணீரினை யேதுடைப் பவரினி யெவரே. 1

**ஞா**ன்று நந்தலில் சத்தையுஞ் சித்தையு நீங்கா
ஆன்ற வின்பசொ ரூபம தாயவி ருன்னைப்
போன்ற தெய்வமுண் டோவெனைப் புணர்கிலை யாயின்
தோன்று மென்விழி நீரினைத் துடைக்குந ரெவரே. 2

**தீ**தில் சத்தெனுந் தாதையுஞ் சித்தெனுந் தாயும்
ஆதி யந்தமி லானந்தக் குழவியு மாமென்
ஆதி யாமடி கேளெனை விரவிக்கொ ளாயேல்
வீதி தோறுமென் விழிப்புன றுடைக்குந ரெவரே. 3

**பெ**ற்று ளோர்பிறந் தோர்மனை மகர்தமர் பிறரும்
சற்று நம்முற வலவென வுன்னியுன் சரட்கன்
புற்று ளேனெனைப் புறம்பெனக் கழிக்கினின் புரிவிங்
கற்று நானிருந் தழும்புன றுடைக்குந ரெவரே. 4

**அ**ன்பர் தங்கருத் தேயுணர்ந் தருள்புரி யருளால்
என்புன் னெஞ்சுணர்ந் துரைத்தவள் ளயிற்கர விறையே
இன்பி னின்னமு மிடையறப் புணர்ந்துகொ ளாயேல்
துன்பி னானழும் விழிப்புன றுடைக்குந ரெவரே. 5

**நு**தற்க ணாறுடை நூனமி லறுமுகங் கரந்தன்
றிதத்தை யேபுகன் மானுட வுருவென வென்முன்
புதித்து மெய்ம்மொழி யுரைத்தனை முழுதுங்கொ ளாயேல்
பதத்தை யேநினைந் தழும்புன லெவர்துடைப் பவரே. 6

**வே**ரி யங்கடம் பணிபுயத் தோய்வினை மேவும்
பூரி யோர்புகு மிருணில மின்னமும் புகுதா
தேரி யங்கடி யுறநினை யென்னைநீ கழிக்கின்
மாரி போன்முகம் வடிப்பது துடைக்குந ரெவரே. 7

**பொ**ய்யை யோர்பவர் பொருந்துமிப் பூதல வாழ்வை
மெய்யை யோர்பவர் சேர்வர்கொன் மெய்ப்பொரு ளாமுன்
செய்ய பாதநம் பியவெனைச் சேர்த்துக்கொ ளாயேல்
உய்யு மாறெனக் கருள்பவ ருலகினி லெவரே. 8

**கோ**ல வாரணங் கூறொரு பரம்பொரு ணீயென்
றாலு மங்கழற் பரமனு மருளின னதுபோல்
சீல வுன்சரண் சிந்தைசெ யெனைக்கொளு கிலையேல்
தால மீதெனக் குன்னடி தருபவ ரெவரே. 9

**அ**ரிய விண்ணவர் புன்கணை வீட்டிநல் லருண
கிரியி ருந்தவற் கருளிய கிருபைவள் ளாலுன்
உரிமை கொண்டுனக் கடைக்கலம் புகுந்துள நாயேன்
பரிவு கண்டரு ளாவிடி னெவரருள் பவரே. 10

மன்மத வருடம் ஆடி மாதம் 31ஆம் தேதி புதவாரம்.